# 09-04-2023 செய்தி

## புலி உறுமுது

- இந்தியாவில் 19ம் நூற்றாண்டில் 40 ஆயிரம் புலிகள் இருந்தன. 1970 களில் 1800 ஆக குறைந்தது.
- 1969-ல் டில்லியில் சர்வதேச இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் பொதுக்கூட்டத்தில், புலிகளை வேட்டையாட தடை விதித்து அவற்றை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
- இந்த எண்ணிக்கையை அதிகரிக்க 1973 ஏப்.1-ல் புலிகள் பாதுகாப்பு திட்டம் இந்தியாவில் தொடங்கப்பட்டது.
- முதலில் உத்தரகண்டில் உள்ள ஜிம் கார்பட் தேசிய பூங்கா, புலிகள் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது.
- துவக்கத்தில் 9 புலிகள் காப்பகம் இருந்தன. பரப்பளவு 18,278 சதுர கி.மீ. தற்போது 18 மாநிலங்களில் 53 புலிகள் பாதுகாப்பகம் உள்ளன.
- மொத்த பரப்பளவு 75 ஆயிரம் சதுர கி.மீ. இத்திட்டத்திற்கான நிதி ரூ.500 கோடியாக உயர்ந்துள்ளது. 2018, கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 2967 புலிகள் வாழ்கின்றன.

## 'டாப்' புலிகள் சரணாலயங்கள்

- ஜிம் கார்பெட் பூங்கா, உத்தரகண்ட்
- பந்திப்பூர் தேசிய பூங்கா, கர்நாடகா
- காசிரங்கா தேசிய பூங்கா, அசாம்
- சுந்தரவனக் காடுகள், மேற்கு வங்கம்
- முதுமலை புலிகள் காப்பகம், தமிழகம்

- நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை புலிகள் கணக்கெடுப்பு பணி நடக்கிறது.

**எதிர்காலம்**

- வனப்பகுதிகளை ஒட்டி விரிவுபடுத்தப்படும் சாலை, ரயில்வே திட்டப் பணிகளால் எதிர்காலத்தில் புலிகளை பாதுகாப்பது சவாலாக இருக்கும்.

**காடுகளை காக்க**

- இந்தியாவின் தேசிய விலங்கு புலி, இதன் எண்ணிக்கை சீராக இருந்தால்தான் பல்லுயிரி பெருக்கத்தை தக்க வைத்து, வனத்தின் இயல்பு நிலையை பாதுகாக்க முடியும்.

**70 சதவீதம்**

- உலகில் உள்ள புலி எண்ணிக்கையில் 70% இந்தியாவில் உள்ளது. 50 ஆண்டுகளில் உயர்ந்த புலி எண்ணிக்கை

| ஆண்டு | எத்தனை |
|---|---|
| 1972 | 1827 |
| 1979 | 3015 |
| 1984 | 4005 |
| 1989 | 4334 |
| 1993 | 3750 |
| 1997 | 3508 |
| 2002 | 3642 |
| 2006 | 1411 |
| 2010 | 1706 |
| 2014 | 2226 |
| 2018 | 2967 |



## தைவானைச் சுற்றிலும் சீனா போர் ஒத்திகை

- தைவான் அதிபர் சாய் இங்-வென்னின் அமெரிக்கப் பயணத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்தத் தீவைச் சுற்றிலும் போர் ஒத்திகையை சீனா தொடங்கியது.
- சீன விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் அந்த நாட்டுக்கும், தைவானுக்கும் இடையே தைவான் நீர்ச்சந்தியில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை 42 முறை கடந்து சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சீன உள்நாட்டுப் போருக்குப் பிறகு தைவான் தனி நாடாக செயல்பட்டு வருகிறது. எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஓர் அங்கமாக சீனா கருதி வருகிறது.
- தைவானை தாங்கள் எப்போது வேண்டுமானாலும் இணைத்துக் கொள்ளலாம்; அதற்குத் தேவைப்பட்டால் ராணுவ பலத்தைப் பயன்படுத்தவும் தயங்கப் போவதில்லை என்று சீன அதிபர் ஷி-ஜின்பிங் கூறி வருகிறார்.
- சீனாவின் எதிர்ப்பையும் மீறி தைவான் அதிபர் சாய் இங்வென் அமெரிக்காவில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பினார்.

## விவிபி திட்டம்

**சீன எல்லை பிரச்சனை**

- சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அருணாச்சல பிரதேசத்தில் ‘Vibrant Villages Program’ (விவிபி) திட்டத்தை மத்திய அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.
- 1951-ம் ஆண்டில் சீன ராணுவம் திபெத்தை ஆக்கிரமித்தது. அப்போதுமுதல் இந்தியா, சீனா இடையே எல்லைப் பிரச்சினை நீடிக்கிறது.
- சீன அரசு, அருணாச்சல பிரதேசத்தையும் சொந்தம் கொண்டாடி வருகிறது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் பகுதிகளுக்கு சீன அரசு புதிய பெயர்களை சூட்டியது.
- மத்திய அரசு அளித்த விளக்கத்தில், “அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த, பிரிக்க முடியாத பகுதி புதிய பெயர்களை சூட்டும் முயற்சியால் உண்மையை மாற்றிவிட முடியாது” என்று திட்டவட்டமாக தெரிவித்தது.
- இதன்படி அருணாச்சல பிரதேசத்தின் 455 எல்லையோர கிராமங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன.
- தவிர இமாச்சல பிரதேசம், சிக்கிம், உத்தராகண்ட், லடாக் ஆகிய பகுதிகளிலும் விவிபி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- இதற்காக 2022 முதல் 2026-ம் ஆண்டு வரை ரூ.4,800 கோடி செலவிடப்பட உள்ளது.
- சீனாவோடு 14 நாடுகள் எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளன.
- இந்த 14 நாடுகளுடனும் சீனாவுக்கு எல்லைப் பிரச்சினை நீடிக்கிறது.
- அதோடு தென்சீனக் கடல் பகுதியையும் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதன் காரணமாக சர்வதேச அரங்கில் சீனாவுக்கு எதிராக இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் ஓரணியில் திரண்டு வருகின்றன.
- அருணாச்சல பிரதேசத்தில் திபெத் புத்த மதத்தினரின் மிக முக்கிய ஆன்மிக தலமான தவாங் புத்த மடாலயம் அமைந்துள்ளது.
- எதிர்காலத்தில் தவாங் புத்த மடாலயத்தில் இருந்து சீனாவுக்கு எதிரான திபெத் புரட்சி வெடிக்கக்கூடும் என்று சீன அரசு அஞ்சுகிறது.
- அதோடு அருணாச்சல் பிரதேசத்தின் தவாங் பகுதி பூடான் எல்லையில் அமைந்திருக்கிறது. அருணாச்சல் பகுதிகளை சொந்தமாக்கினால் பூடானையும் எளிதாக ஆக்கிரமிக்கலாம் என சீனா கருதுகிறது.

## சுகோய் போர் விமானத்தில் பறந்தார் குடியரசுத்தலைவர்

- முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் கடந்த 2009-ம் ஆண்டு புனே விமானப்படை தளத்தில் இருந்து சுகோய் விமானத்தில் முதல் முறையாக பறந்தார்.



- அந்த விமானம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3 கி.மீ உயரத்திலும், மணிக்கு சுமார் 800 கி.மீ வேகத்திலும் 25 நிமிடங்கள் பறந்தது.
- இதன் மூலம் போர் விமானத்தில் பறந்த 3வது இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் 2வது பெண் குடியரசுத் தலைவர் என்ற பெருமையை திரவுபதி முர்மு பெற்றுள்ளார்.
- முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் மற்றும் பிரதிபா பாட்டீல் ஆகியோருக்குப் பிறகு போர் விமானத்தில் பறக்கும் 3-ஆவது குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு என்பது குறிப்பிடத்தக்கது.

### நாட்டின் காகித பயன்பாடில்லாத முதல் நீதிமன்றம்

- நாட்டின் முதல் காகித பயன்பாடில்லாத எண்ம (டிஜிட்டல்) நீதிமன்றமாக வாஷி நீதிமன்றம் திகழ்கிறது என்று மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.
- நீதிமன்றங்களின் சுமையைக் குறைக்க இணையவழியில் சட்ட ஆவணங்களைத் தாக்கல் செய்யும் முறை, எண்ம நீதிமன்றம் ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டன.
- நீதிமன்றங்களின் ஒட்டுமொத்த பணியும் காகிதப் பயன்பாடு இல்லாததாக மாறினால், தீர்ப்புகள் விரைந்து வழங்கப்படும்.




SURESH' IAS ACADEMY